# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்

**நிலையறிபரீட்சை– 2021**

## வரலாறு–II

| பெயர் ∴சுட்டெண் :- ………………… | தரம் :- 10 | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**
- பகுதி I இன் **முதலாம்** வினா கட்டாயமானது.
- பகுதி II இல் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக..
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை தருக.

**மேலதிகவாசிப்புநேரம் : 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்திக்கொள்க.

## வரலாறு - II

### பகுதி -I

01 (அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தின் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கலாஓயா, கும்புக்கன்ஓயா,மின்னேரியாவாவி ,குருளுவாவி, மகாவாலுகாம, கதிர்காமம், மட்டக்களப்பு, பாஹியன்கல குகை,மாத்தளை, ஆனையிறவு, பல்லவங்க, சல்வாத்தோட்ட (12 புள்ளிகள்)

(ii) கள்ளிக்கோட்டை, ஜாவாத்தீவு,ஜப்பான்,கஸ்பியன்கடல்,பாரசீகக்குடா, போர்த்துக்கல் (6 புள்ளிகள்)

(ஆ) (I) பின்வரும் கூற்றுக்களுக்குரிய விடைகளை A,B,C,D ஒழுங்கில் தருக.

A கி.பி 1658 இல் றொபெட் நொக்ஸ் என்ற நூலாசிரியரை சிறையில் அடைத்த கண்டி இராச்சிய மன்னன்.

B தலதாமாளிகையின் பாதுகாப்பிற்காக வேளைக்காரப்படையை நியமித்த மன்னன்

C இலங்கையில் மிக நீளமான கால்வாயை அமைத்த அனுராதபுர ஆட்சியாளன்

D அனுராதபுரத்தில் வாழ்ந்த பாரசீக வியாபாரிகள் பற்றிய கருத்தைக்கூறிய கி.பி 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தேசசஞ்சாரி. (4 புள்ளிகள்)

A. B எனக் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(II) 1 .படம் Aஇல் காட்டப்பட்ட உருவின் பெயர் யாது?

2.இது இலங்கையின் எக்காலப்பகுதிக்குரியது?

3.இது கண்டெடுக்கப்பட்ட இடம் எந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளது?

4.இது இலங்கையின் ஆதிகாலம் தொடக்கம் எத்தொழிநுட்பம் இருந்து வந்தது என்பதற்கான ஆதாரமாகும்?.......................



(A)

(4 புள்ளிகள்)

(III) 1 படம் Bஇல் காட்டப்பட்டிருக்கும் மன்னனின் பெயர் யாது?

2.இந்த மன்னனின் உருவச்சிலை அமைந்து காணப்படும் இடம் எது?

3.இவர் காணிக்கை வழங்கிய விகாரையின் பெயர் என்ன?

4.இவருடைய ஆட்சிகாலத்தில் வர்த்தக தொடர்புகளை மேற்கொண்ட நாடு எது?



(B)

(4 புள்ளிகள்)

## பகுதி - II

02. (I)(A) தான் வரைந்த உலகப்படத்தில் இலங்கையை தப்ரபேன் எனக் குறிப்பிட்ட உரோம இனத்தவர் யார்? (1 புள்ளி)

(B) இசுறுமுனிய விகாரையில் காணப்படும் மனிதன்,குதிரைத்தலை என்பவற்றால் உணர்த்தப்படும் தெய்வங்கள் **இரண்டும்** எவை? (2 புள்ளிகள்)

(II) இலங்கை பற்றிய குறிப்புக்களை எழுதிய சீன நாட்டவர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(III) சாசனங்கள் உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள் **இரண்டு**தருக.(2 புள்ளிகள்)

(IV) (A) இலக்கிய மூலாதாரங்களினால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **இரண்டு**தருக. (2 புள்ளிகள்)

(V) வரலாற்றுத் தகவல்களைக் கூறுவதில் கல்வெட்டுக்கள் மிகவும் முக்கியம் பெறுகின்றன என்பதை **மூன்று**காரணிகளின் ஊடாக விளக்குக. (6 புள்ளிகள்)

03 (I) (A) பிளைத்தோசின் என்னும் புவியியல் காலப்பகுதியில் நிலவிய முக்கிய புவியியல் அம்சம் எது? (1 புள்ளி)

(B) வரலாற்றுக்கு முற்பட்டகாலம் கலாசார அடிப்படையில் பிரிக்கப்படும் **இரு** கட்டங்களும் எவை? (2 புள்ளிகள்)

(II) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த **இரு** வகையான வாழ்விடங்களும் எவை? (2 புள்ளிகள்)

(III) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் உடலமைப்பின் இயல்புகள் **இரண்டு**தருக.

(2 புள்ளிகள்)

(IV) வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களின் அடிப்படை இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(V) முன்வரலாற்றுக்காலத்தில் பல்வேறு வகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறான மாற்றங்களுள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04. (I) பின்வரும் கூற்றுக்களோடு தொடர்புடைய விடைகளை A,B,Cஒழுங்கில் குறிப்பிடுக.

A) குடும்பத்தலைவனைக் குறிப்பதற்கு பிராமிக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட சொல்லைக் குறிப்பிடுக.

B) பத்துக்கிராமப் பிரதானிகளைக் கொண்ட சபையைக் குறிப்பதற்கு கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்.

C) அரசுக்கு முற்பட்ட காலத்தில் சிறிய பிரதேசங்களில் நிர்வாக நடவடிக்கையை மேற்கொண்டவர் எவ்வாறு அழைக்கப்பட்டனர். (3 புள்ளிகள்)

(II) மத்திய மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தில் பின்வரும் பொறுப்பு வகித்தவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A) பொருளாளர் B) வழக்குகள் மரபுகள் தொடர்பான அதிகாரி

C) காசு அச்சிடும் பிரிவின் தலைவர்D) அரச ஆவணங்களின் தலைவர்

(கனபெடிக, பன அதெக, கொதுறுகேனா, படகாரிக,ரூபஅதெக, அச அதெக)

(4 புள்ளிகள்)

(III) மத்தியமயப்படுத்தப்பட்ட அரசினை உருவாக்குவதற்கு துட்டகைமுனு மேற்கொண்ட செயற்பாடுகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளிகள்)

(V) புராதன காலத்தில் மக்கள் மன்னர்களிடம் பல்வேறு சேவைகளை எதிர்பார்த்தனர். அத்தகைய சேவைகளுள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05. (I) (A) புராதன காலத்தில் பாலைப் பெறுவதற்காக வளர்க்கப்பட்ட பசுக்களுக்கு வழங்கப்பட்ட பெயர் யாது? (1 புள்ளி)

(B) சேனைப்பயிர்ச்செய்கையின் போது அறவிடப்பட்ட வரிகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(II) புராதன காலத்தில் சுகாதார வைத்தியத்துறைக்குப் பங்காற்றிய மன்னர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(III) இலங்கையில் பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட வெவ்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் ஒன்றாக வாழ்ந்துள்ளனர். அவ்வாறு வாழ்ந்த மக்கள் பிரிவினரில் **இரண்டு** பிரிவினரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(IV) புராதன காலத்தில் பிரதான சமயமாக பௌத்தம் காணப்பட்டாலும் பிற சமயங்களைப் பின்பற்றுபவர்களும் வாழ்ந்துள்ளனர். அத்தகையவர்கள் பின்பற்றிய சமயங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(V) புராதன கால பொருளாதார அமைப்பில் கைத்தொழில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையினை **மூன்று** கைத்தொழில்களின் ஊடாக விளக்குக. (6 புள்ளிகள்)

06. (I) (A) புராதன காலக் கல்வெட்டுக்களில் "ரஜமொஹால்"எனக்குறிப்பிடப்பட்டுள்ள குளத்தின் கூறு எது? (1 புள்ளி)

(B) எமது நாட்டில் பாரிய குளங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்ட அனுராதபுர ஆட்சியாளர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) அனுராதபுரம், பொலநறுவைக் காலங்களில் கட்டப்பட்ட பௌத்த சமயக் கட்டடங்களை பலவாறாக வகைப்படுத்தலாம். அவ்வாறான கட்டட வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(III) ருவன்வெலிசாய கட்டட அமைப்பில் பின்பற்றப்பட்ட தொழினுட்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(IV)கி.பி 5ஆம் நூற்றாண்டளவில் அமைக்கப்பட்ட சிறந்த ஆக்கமாக சீகிரியா படைப்புக்கள் அமைந்துள்ளன. பின்வரும் **இருதலைப்புக்களின்** கீழ் அவற்றின் சிறப்பம்சங்களை விளக்குக.

(A) நகர அமைப்பு (B) நீர்ப்பூங்கா (5 புள்ளிகள்)

(V) முன்வரலாற்றுக்கால விஞ்ஞான அறிவை வெளிப்படுத்தும் முக்கியமான சந்தர்ப்பங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு அவற்றினை விளக்குக. (6 புள்ளிகள்)

07. (I) பின்வரும் குளங்கள் அமைந்துள்ள நதிகளை முறையே குறிப்பிடுக.

(A) குருளுவாவி (B) பதவியாக்குளம் (C) கலாவாவி (3 புள்ளிகள்)

(II)புராதன காலத்தில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு அளவை முறைகள் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன. அவற்றுள்

(A) நிறையை அளக்கப் பயன்படுத்தப்பட்ட அளவை முறைகள் **இரண்டை** எழுதுக.
(B) நீளத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட அளவை முறைகள் **இரண்டை** எழுதுக.

(அக்க, பரமாணு,பேல்ல, குறுனி, கவ்வ, சுவர்ண, ஹவஜர, தீதிய) (4 புள்ளிகள்)

(III) (A) புராதன காலத்தில் இரும்பு பிரித்தெடுத்தல் தொடர்பான ஆதாரம் கிடைத்துள்ள இடங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B) அவ்விரண்டு இடங்களில் ஒன்றில் இரும்பைப் பிரித்தெடுத்தலில் பின்பற்றப்பட்ட தொழினுட்பங்களைச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

(IV) குளமானது பல்வேறு கூறுகளைக் கொண்டதொரு பிரமாண்டமான அமைப்பாகும். அத்தகைய கூறுகளுள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றின் **அமைப்புமுறை,பணிகள்** என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

08. (I) புராதன கால மக்களின் உணவு வகைகளில் பின்வரும் சொற்களால் குறிப்பிடப்படும் உணவுப் பொருட்களை **முறையே** எழுதுக.

(A)“திலசங்குலிகா” (B) “அபுஹும்புகாடி” (C)“தீகிரி” (3 புள்ளிகள்)

(II) A.B.C.D என்னும் தகவல்களோடு தொடர்புடைய கல்வெட்டுக்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுமுக.

(A) உள்நாட்டு வர்த்தகம் சம்பந்தமான சட்டங்கள் காணப்படுதல்.

(B) அனுராதபுர வீராங்குர விகாரையில் வாழ்ந்த பிக்குகளுக்கு 200 தங்கக் கலங்கள் நான்காம் காசியப்ப மன்னன் வழங்குதல்.

(C)உரிய காலத்தில் உழவுசெய்யத்தவறும் நபர்களுக்கு ஐந்து கலங் அபராதமாகச் செலுத்துமாறு கூறப்பட்டிருத்தல்.

(D) உழுந்து, பயறு, எள் என்பன பற்றிக் குறிப்பிடும் (கி.பி 301– 328) காலப்பகுதிக்குரிய கல்வெட்டு

(பதுளைத்தூண் கல்வெட்டு, கொண்டவட்டவான் கல்வெட்டு, வெஸ்ஸகிரிக்கல்வெட்டு, தோணிக்கலக் கல்வெட்டு, மிகிந்தலைக்கல்வெட்டு, கொடவாயதூண்கல்வெட்டு) (4 புள்ளிகள்)

(III) புராதன காலத்தில் பல்வேறு வரிகளை விதிப்பதன் மூலம் பொருளாதார, சமூக ஒழுங்கமைப்புக்களைப் மன்னர்கள் பேணியுள்ளனர். அவ்வாறான வரிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) புராதன காலத்தில் மன்னர்கள் பல்வேறு சட்டங்களை உருவாக்குவதன் மூலம் சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்தினர். அவ்வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் தொடர்பான தகவல்களை பின்வரும் **இரு** தலைப்புக்களின் ஊடாக விளக்குக.

(A) உயிரினங்களைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டங்கள்
(B) குற்றவியல் தொடர்பான சட்டங்கள் (6 புள்ளிகள்)

09. (I) பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்து தம்பதெனியா தலைநகராக்கப்படும் வரை பாதுகாப்பு மையங்களைத் தெரிவு செய்தவர்கள் **மூவரைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பின்வரும் A,B,C,D என்னும் கூற்றுக்களோடு தொடர்புடைய மன்னர்களைக் அதே ஒழுங்கில் குறிப்பிடுக.

(A) கலிங்கமாகன் பொலநறுவையில் அரசாட்சி புரிந்த கொண்டிருந்தபோது அவனுக்குச் சவாலாக மாயரட்டையின் எல்லையில் சுதந்திரமான சிங்கள அரசொன்றை அமைத்தல்.


(B) கி.பி 1247, கி.பி 1261 ஆகிய ஆண்டுகளில் இடம்பெறற சந்திரபானுவின் ஆக்கிரமிப்புக்களை வெற்றிகரமாக முறியடித்தல்.


(C)காலிங்கராயர், சோடகங்கன் என்னும் தென்னிந்திய தளபதிகளின் படையெடுப்புக்களை முறியடித்தல்.

(D) பாண்டிய மன்னனிடம் ஒப்படைக்கப்பட்ட புனிததந்ததாதுவை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வருதல். (4 புள்ளிகள்)

(III)உலர் வலயங்களில் புராதன நகரங்கள் வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்த காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) கம்பளை இராச்சிய காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)


N


N
අප්‍රිකාව
ஆபிரிக்கா
Africa
ඉන්දියන් සාගරය
இந்து சமுத்திரம்
Indian Ocean